


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு தினவிழா நிகழ்ச்சி, ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கலையரங்கத்தில் இன்று (30.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 79/2017 நாள்: 30.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு தினவிழா நிகழ்ச்சி இன்று (30.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு தினவிழா நிகழ்ச்சி, ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள கலையரங்கத்தில் இன்று (30.01.2017) நடைபெற்றது.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

தொழுநோய் பாவத்தாலோ அல்லது சாபத்தாலோ வருவதல்ல. இதுவும் ஒரு வகை பாக்டீரியாவால் வருகிறது. மைக்ரோ பாக்டீரியம் லெப்ரே (Micro Bacterium Leprae) என்ற கிருமியால் ஏற்படுகிறது. இந்த நோயானது, தோல் மற்றும் நரம்புகளை பாதிக்கக் கூடியது, சிவந்த அல்லது வெளிரிய உணர்ச்சியற்ற தேமல் தொழுநோயின் அறிகுறியாகும். நரம்புகளை பாதிப்பதால் ஊனங்கள் ஏற்படுகிறது. உணர்வு நரம்புகள் பாதிக்கப்படுவதால் கால் மற்றும் கைகளில் புண்கள் ஏற்பட்டு, கை விரல்கள் மடங்குவது மற்றும் கால்கள் இழுத்து நடப்பது போன்ற ஊனங்கள் ஏற்படுகிறது.

தொழுநோய் சிகிச்சை முறையினை இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. PB வகை (PAUCI BACILLARY) 1 முதல் 5 படைகள் (தேமல்கள்) மற்றும் 1 நரம்பு பாதிக்கப்படுதல்.
2. MB வகை (MULTI BACILLARY) 6 முதல் 10 தேமல்கள் 1-க்கு மேற்பட்ட நரம்புகள் பாதிக்கப்படுதல்.

மேலும், கூட்டு மருந்து சிகிச்சை (MULTI DRUG THERAPY) MDT

PB வகை நோயாளிகளுக்கு 6 மாதம் சிகிச்சைகளும், MB வகை நோயாளிகளுக்கு 12 மாதம் சிகிச்சைகளும் அளிக்கப்படுகிறது.

இந்த மைக்ரோ பாக்டீரியம் லெப்ரே மனிதனின் உடம்பில் தொற்றிக் கொண்டால், நோயின் அறிகுறி வெளிப்பட 2 முதல் 5 வருடங்கள் வரை ஆகும். இதை போக்குவதற்கு மாநிலம் முழுவதும் திட்டம் முடுக்கிவிடப்பட்டு களப்பணியாளர்கள் வீடு, வீடாக சென்று, ஆய்வு நடத்தி நோயின் தன்மையை விளக்கிக் கூறி, அவர்களை பரிசோதனை செய்து புதிய நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாக சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

ஏற்கெனவே, 1,000 நபர்களின் 56 நோயாளிகள் என்ற நிலைமை மாறி, தற்போது 1,000 நபர்களுக்கு 0.32 என்ற விகிதத்தில் உள்ளது.

நமது மாவட்டத்தில் இந்த விகிதம் 0.34 ஆக உள்ளது. டிசம்பர் 2016 நிலவரப்படி 86 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், சுமார் 435 நோயாளிகளுக்கு சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளது.

நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவர்கள் வழங்கும் அறிவுரையினை பின்பற்றி, சிகிச்சைகளை சரியான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நோயினை, ஆரம்பத்திலேயே மருத்துவர்களிடம் காண்பித்து, சிகிச்சையினை பெற வேண்டும். மேலும், மருத்துவர்கள், நோயாளிகளிடம் இருக்கும் பயத்தை போக்குவதோடு, அவர்கள் மீண்டும் நல்ல நிலைக்கு திரும்புவார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, பள்ளி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைபோட்டி, ஓவியப்போட்டி, தொழுநோய் மராத்தான் ஓட்டம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற 15 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும், செவிலியர்கள் பயிற்சி கல்லூரியில் பயிலும் செவிலியர் மாணவிகளிடையே நடைபெற்ற வினாடிவினா போட்டியில் வெற்றி பெற்ற 6 செவிலியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும் வழங்கினார். அதனை தொடர்ந்து, நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு உறுதிமொழியினை, அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக, ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜி. இரவீந்திரன் அவர்கள், கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியானது, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் துவங்கி, வெளி நோயாளியின் பிரிவு வழியாக, தேர்வு கூடத்திற்கு வந்து நிறைவு பெற்றது. இதில் சுமார் 200-க்கும் மேற்பட்ட அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. ஜி. இரவீந்திரன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.ஏ.வசந்தி, துணை இயக்குநர்கள் (மருத்துவப்பணிகள் (தொ)) மரு. எஸ்.கிரிஜா, மரு. வி.பி.துரை (மாவட்ட காசநோய் மையம்), மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் (பொ) மரு. செ.எலிசா, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி துறை தலைவர் (தோல் நோய் பிரிவு) மரு.ஏ.ஜெ.எஸ். பிரவின், இந்திய மருத்துவசங்கம், அரசு மருத்துவக்கல்லூரி மரு. பி. நாராயண ஶ்ரீனிவாசன், நலக் கல்வியாளர் திரு. வி. பிச்சாண்டி உள்ளிட்ட அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.